

# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org



**திருத்தந்தையின் கருத்து** : **கிறிஸ்துவ ஒருமைப்பாடு: எல்லா கிறிஸ்தவர்களும் திருச்சபை ஒன்றிப்பை மீண்டும் நிலைநிறுத்த செபத்திலும், சகோதரத்துவ தர்மத்திலும் உழைக்கவும், ஒத்துழைப்பினால் மனுக்குலம் எதிர்நோக்கும் சவால்களை சந்திக்கவும் ஆண்டவரின் படிப்பினைக்கு விசுவாசமாய் இருக்க வேண்டுமென்று**

**ஜனவரி மாத கரு** : **இறையரசுக்கான கடவுளின் கொடை**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 29 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 4-ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 4-ஆம் ஞாயிறு |
| ஜன 30 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| | மாலை 4.30 | திருமணம் (த) | ஸ்டீவ் டென்னிஸ் டேவிட் & வெரோணிக்கா டேவிட் |
| ஜன 31 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித ஜோன் போஸ்கோ |
| பிப் 2 வியா | மாலை 6.30 | திருப்பலி (த) | ஆண்டவரை ஒப்புக்கொடுத்தல் |
| பிப் 3 வெள் | மாலை 4.30 | சடங்கு (த) | அன்பரசன் அர்ஜுனா & கிளாரா பிரான்சிஸ் சேவியர் |
| | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 1 |
| பிப் 4 சனி | காலை 10.00 | திருப்பலி (ஆ, த) | குணமளிக்கும் திருப்பலி |
| | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 2 |
| பிப் 5 ஞா | காலை 6.45 | நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்கால 5-ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3) |
| | காலை 8.45 | நவநாள்/ திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 5-ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3) |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஜன 29 ஞா | காலை 11.45 | ஆலயம் | புலூமா திருவிழா விளக்கவுரை |
| ஜன 30 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | ஆன்மீகக் குழு கூட்டம் |
| ஜன 31 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | தியான வகுப்புகள் |
| | மாலை 8.00 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| பிப் 1 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | அருங்கொடை (த) |
| | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| பிப் 2 வியா | மாலை 7.30 | பெர். மை 1-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| பிப் 3 வெள் | மாலை 4.00~6.30 | ஆலயம் | லூர்து குளியல் |
| | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| பிப் 5 ஞா | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |

<u>பிப்ரவரி மாத திருமணம் 2017</u>

பிப் 25 மாலை 4.30 சடங்கு (த) பெர்னட் த/பெ சந்தனசாமி & ஜெனிபர் த/பெ அந்தோணி

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பாரம்பரிய காட்சியகம்:** பாப்பாண்டவரின் "Bene Merenti" & "Pro Ecclesia et Pontifice" விருதுகளைப் பெற்றவர்களின் பட்டியலை முறைப்படுத்தி, தொகுத்து, அதனை உறுதிப்படுத்த செய்தித்தாள் குறிப்புகளையும் திரட்ட உதவிய சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன் & திரு. ஜெரோம் சாமுவேல் அவர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

**2. குணமளிப்பு மற்றும் நோயாளர்களுக்கான திருப்பலி:** 4/2/17 (சனி) காலை 10.00க்கு திருப்பலி நடைபெறும். 29/2/17 (ஞாயிறு) திருப்பலிக்கு பிறகு பெயர்களை பங்கு அலுவலகத்திலோ/ பங்கு மண்டபத்திலோ பதிவு செய்யலாம். தயவுசெய்து பதிவு செய்யும்போது குணமளிப்பு தேவைப்படும் நபர் கத்தோலிக்கரா அல்லது கத்தோலிக்கர் அல்லாதவரா என்பதை தெரியப்படுத்தவும்.

**3. புலூமா திருவிழா:**

- 29/1/17 (ஞாயிறு) காலை 11.45க்கு ஆலயத்தில் புலூமா திருவிழா நவநாள்/ திருப்பலிக்கான விளக்கமளிக்கப்படும். பின்வரும் பணிக்குழுக்கள் உங்களது பிரதிநிதிகளை இந்த விளக்கக் கூட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆன்மீகக்குழு, பமமேகு, மறைக்கல்வி, புனித செபஸ்தியார் சிற்றாலயம், அ. வே சிற்றாலயம், கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், நற்கருணை பணியாளர்கள், இளைஞர்கள், திருப்பலி மேற்பார்வையாளர்கள், உபசரிப்பு குழு வருகை கட்டாயம்.
- புலூமா திருவிழா அன்னையின் சுரூபத்தைச் தூக்கிச்செல்பவர்கள் தயவு செய்து உங்களது பெயர்களை 5 பிப் 2017க்குள் பங்கு அலுவலகத்தில் அல்லது பங்கு மண்டபத்தில் ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: திரு. அ. வேளாங்கண்ணி (016-5643235)
- பங்கு திருவிழாவின்போது (உணவு) அல்லது ரொக்கமாக நன்கொடைகளை செலுத்த விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.
- 10/2/17 (வெள்) மாலை 9.00க்கு நவநாள் திருப்பலிக்கு பிறகு ஆலயத்தில் அனைத்து திருவழிப்பாட்டு பணிக்குழுக்கள், சிற்றாலய தலைவர்கள், அன்னையின் சுரூபத்தை தூக்கிச் செல்பவர்கள் மற்றும் ரேலா பிரதிநிதி ஆகியோருக்கு திருவிழா விளக்கவுரை நடைபெறும். வருகை கட்டாயம்

**4. பழைய செய்திதாள்:** கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு, புதிய சிற்றாலயத்தை கட்டுவதற்காக பழைய செய்தித்தாள்களை சேகரித்து விற்க திட்டமிட்டுள்ளது. கொடுக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளை கொண்டு வந்து பங்கு மண்டபத்தில் கொடுக்கலாம்.

**5. சீடத்துவ நிகழ்வுகள்**: உங்களது பெயர்களை பதிவு செய்தவர்கள் 18 பிப் 2017 (சனி) @ காலை 10.30க்கு பெர். மையத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**6. 24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்:** SPM & அதற்கு மேல் முடித்தவர்களுக்கும் தனித்த இளைஞர்களுக்கும் பொதுவானது. இந்த நிகழ்வு மறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வம் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 4 ~ 5 பிப் 2017 முதல் ஒவ்வொரு மாதமும் முதலாவது சனி & ஞாயிறு மதியம் 12~ மதியம் 12 மணி வரை நடைபெறும். இடம் பதிவின் போது தெரிவிக்கப்படும். கட்டணம் இல்லை. தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தொடர்புக்கு: வின்சென்ட் PDPI (04-2611350) அலுவலக நேரம் திங்- வெள்/ மின்னஞ்சல் pdpi2005@gmail.com

**7. லூர்து பங்கில் தியான வகுப்புகள்:** 31/1/17 (செவ்) @ மாலை 8.00க்கு பெர்.மை 1-3ல் தியான வகுப்புகளை தொடங்க இருக்கிறோம். கலந்துக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் சிறு மெத்தைகளை (உட்காருவதற்கு/ பின்னால் வைத்துக்கொள்ள) கொண்டு வரவும். நீளமான கால் சட்டைகளை அணிந்து வர வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ அல்லது குட்டையான பாவாடைகளோ அணிய வேண்டாம்.

**8. தகவலுக்கான கோரிக்கை:** ஈப்போ லூர்து பாரம்பரிய காட்சியகம் பின்வரும் தகவல்களை சேகரிக்கிறது. அ) **M. Dawson**, 1959-ல் பீடத்திற்கு மேலுள்ள 4 சித்திர வேலைப்பாட்டு கண்ணாடிகளுக்கு வர்ணம் தீட்டிய தனி நபர் ஆ) பளிங்கு பீட மேடை மற்றும் பளிங்கு சுவர் பற்றிய மேல் அதிக தகவல்கள் இ) **திரு.** K. **அருளானந்தம்,** திரு பிலிப்ஸ் எட்ரியன் பெரிஸ் (P. A. பெரிஸ்) M. B. E.. உடன் இணைந்து பணியாற்றிய ஆலய கட்டிட வடிவமைப்பாளர்.

**9. ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

**10. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**11. விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி டிசம்பர் 2016 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- 216,889.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- 240,540.31 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**22/01/17 திருப்பலி வசூல்கள்:** **காலை** 7.00 - RM 1,072.00 **காலை** 9.00 - RM 1,583.50 **காலை** 11.00 - RM 170.00

**புந்தோங் தீகா**– RM 182.05 **மொத்தம்**– RM 3,007.55 **2016** - RM 160.00 **2017** - RM 250.00 **மொத்தம்**– RM 410.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்